# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**********

**முறையீட்டு மனு எண்: 204/2018/பே**
**ஆணை நாள். 26–03–2019**

திரு. R. தங்கபாண்டி,
57, பெரியான்விளை,
ஆறுமுகநேரி,
தூத்துக்குடி மாவட்டம். — முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திருச்செந்தூர் பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம். — எதிர் மனுதாரர்.

ஆணை.

தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகநேரி, எண்.57, பெரியான்விளை பகுதியினைச் சேர்ந்த திரு.ஆர்.தங்கபாண்டி, என்பவரது 23.07.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 04.09.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.204/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும், பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு.ஆர்.தங்கபாண்டி, முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் பேரூராட்சியில் 2016–ஆம் ஆண்டு தன்னால் பேரூராட்சிப் பகுதியில் சுகாதாரப் பணிகள் மற்றும் திருச்செந்தூர் பேரூராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் இரண்டு வாகனம் மூலம் குடிநீர் விநியோக பணிகள் செய்யப்பட்டதாகவும், மேலும் பேரூராட்சி செயல் அலுவலரின் உத்திரவின்பேரில் 2016–ஆம் ஆண்டில் பேரூராட்சிக்குட்பட்ட அனைத்து இடங்களிலும் ஜே.சி.பி.மூலம் சுத்தம் செய்ததாகவும் மேற்படி பணிகளுக்கான மொத்தத் தொகை ரூ.9,22,000/– க்கான கேட்புப் பட்டியல் பேரூராட்சி செயல் அலுவலரிடம் வழங்கியுள்ளதாகவும், ஆனால் தனக்கு கடந்த இரண்டாண்டுகளுக்கும் மேலாக மேற்படி பட்டியல் தொகை

வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து தான் செய்த பணிகளுக்கான தொகையினை வழங்க திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடக் கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

20.09.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில், முறையீட்டு மனுதாரரின் 23.07.2018 நாளிட்ட முறையீட்டு மனுவின் நகலினை, திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள புகார்களுக்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

04.10.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையில் முறையீட்டு மனு தொடர்பான விசாரணைக்காக இம்முறைமன்ற நடுவத்தில் 12.11.2018 அன்று ஆஜராகத் தெரிவித்து முறையீட்டு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது.

08.10.2018 நாளிட்ட தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில், முறையீட்டு மனுதாரர் திரு.ஆர்.தங்கபாண்டி என்பவரின் 23.07.2018 நாளிட்ட முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள பணிகளுக்கான செலவினத் தொகை ரூ.8,06,900/– செலவு சீட்டு எண்.267/நாள்,14.09.2018ன் மூலம் ரூ.3,22,400/– மற்றும் செலவு சீட்டு எண்.269/நாள்.17.09.2018ன் மூலம் ரூ.4,84,500/–வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து செலவு சீட்டுகளின் நகல்களையும் இணைத்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

17.10.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையுடன், பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையின் நகல் முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பிவைக்கப்பட்டு, மேற்படி விளக்க அறிக்கையின் மீதான விளக்கம்/ஆட்சேபணை ஏதுமிருப்பின் அதன் விவரத்தினை ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிக்கத் தெரிவித்தும், இப்பொருள் தொடர்பாக 12.11.2018 நாளிட்ட விசாரணைக்கு ஆஜராகத் தெரிவித்தும் மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது.

மேற்படி விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. மேலும் முறையீட்டு மனுதாரரிடமிருந்து எவ்வித விளக்கமும் பெறப்படவில்லை. இருப்பினும், கூடுதல் வாய்ப்பளித்து 24.01.2019 அன்று மறு விசாரணை நிர்ணயிக்கப்பட்டு மேற்படி விசாரணைக்கு இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி தனது தரப்பிலான விளக்கங்களை பதிவு செய்யுமாறு இம்முறைமன்ற நடுவ 20.12.2018 நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

24.01.2019 நாளிட்ட விசாரணைக்கும் முறையீட்டு மனுதாரர் ஆஜராகாத நிலையில், 01.03.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில், 08.10.2018 நாளிட்ட திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மீதான தனது ஆட்சேபணை/விளக்கத்தினை ஒரு வார காலத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்க மீண்டும் மனுதாரருக்கு வலியுறுத்தி ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் நாளது தேதி வரை தனது தரப்பிலான எவ்வித விளக்கங்களையும் / ஆட்சேபணைகளையும் சமர்ப்பிக்கவில்லை.

எனவே முறையீட்டு மனுதாரர் தரப்பில் கூறிக் கொள்ள முகாந்திரம்/ஆட்சேபணை ஏதுமில்லை எனக் கருதி, இப்பொருள் தொடர்பாக தொடர் நடவடிக்கையினை கைவிட முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்
1.திரு.ஆர்.தங்கபாண்டி,
57, பெரியான்விளை,
ஆறுமுகநேரி,
தூத்துக்குடி மாவட்டம்.
2.செயல் அலுவலர்,
திருச்செந்தூர் சிறப்பு நிலை பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.
3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்
உதவிப் பிரிவு அலுவலர்(ஊராட்சிகள் பிரிவ)